# அபிவிருத்தியில் இடரீதியான வேறுபாடுகள்

மேகலா, வி. [1], சுதாகர், க. [2]

புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*mehala.vijay14@gmail.com[1]*

**ஆய்வுச்சுருக்கம்** - நடைமுறை உலகில் சமூகங்களுக்கிடையே பிரச்சினையைத் தோற்றுவிக்கும் விடயமாக அபிவிருத்தியில் இடரீதியான சமமின்மை காணப்படுகின்றது. இத்தகைய சமமின்மை தோற்றம் பெறுவதற்கு அவ்வவ் பிரதேசங்களில் காணப்படும் பௌதிக, மானிட, அரசியல், வரலாற்று மற்றும் சூழல் சார் காரணிகள் காரணமாக உள்ளன. பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வளர்ந்துவரும் பிரதேசமாக யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் காணப்படுகின்ற போதிலும் இடரீதியான அபிவிருத்தி செயற்பாடுகளில் ஏற்றத்தாழ்வுகள் நிலவப்பெறுகின்றமை மூலம் வளம் மிக்க பிரதேசங்கள் மேலும் வளமானவையாகவும் பின்தங்கிய பிரதேசங்கள் மேலும் பின்தங்கிய பிரதேசங்களாக மாற்றமடைகின்றன. இத்தகைய இடரீதியான ஏற்றத்தாழ்வு சார் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவ் ஆய்வானது யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் அபிவிருத்தி சார் செயற்பாடுகளில் இடரீதியான வேறுபாடுகளை மதிப்பிடுதல் எனும் இலக்கோடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி இலக்கினை அடைவதற்கு அபிவிருத்தியில் இடம்சார் வேறுபாடுகளை இனங்காண்பதற்கான கட்டளைக் கற்களை அடையாளம் செய்தல், சமூக, பொருளாதார மற்றும் குடியியல் சுட்டிகளின் அடிப்படையில் இடம்சார் அபிவிருத்தி வேறுபாடுகளை அடையாளம் செய்தல் மற்றும் முழுமையான அபிவிருத்தியில் பிராந்திய வேறுபாட்டினை மதிப்பிடுதல் ஆகிய நோக்கங்களையும் கொண்டுள்ளது. மேற்படி நோக்கங்களை எய்துவதற்கு பல்வேறு மூலங்களில் இருந்து முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதல்நிலைத் தரவுகள் பீளு, கட்டமைக்கப்படாத நேர்முகக் கலந்துரையாடலுக்கூடாகவும் இரண்டாம் நிலைத் தரவுகள் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகங்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் புஜளு மற்றும் கூட்டு சுட்டெண் புள்ளிவிபர முறைகளுக்கூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவ் ஆய்வின் முடிவில் 68 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சமூகக் குறிகாட்டியில் உயர்மட்டத்தில் காணப்படும் பிரதேசங்கள் பொருளாதார அபிவிருத்தியில் இடைமட்டம், தாழ் மட்டத்திலும் பொருளாதார அபிவிருத்தியில் உயர்மட்டத்தில் காணப்படும் பிரதேசங்கள் சமூக, குடியியல் அபிவிருத்தியில் இடைமட்டம் மற்றும் தாழ்மட்டங்களில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. முழுமையான அபிவிருத்தியில் ஏழு பிரதேசங்கள் மாத்திரமே உயர்மட்ட அபிவிருத்தியில் காணப்படுகின்றன. 46 பிரதேசங்கள் தாழ்மட்ட அபிவிருத்திப் பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் வறுமை, வருமான மட்டம், சுகாதார மையங்கள், வர்த்தக நிலையங்கள், கல்வியறிவு மற்றும் தொழில்நிலை என்பன அபிவிருத்தியில் இடரீதியான ஏற்றத்தாழ்வுகளுக்கான காரணங்களாக வெளிக்காட்டப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் ஊடாக யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் அபிவிருத்தியில் இடரீதியான வேறுபாடுகள் மதிப்பிடப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் இலங்கையிலும் அபிவிருத்தியில் இடரீதியான ஏற்றத்தாழ்வுகள் சம்மந்தமான பிரச்சினைகளை அடையாளம் கண்டு கொள்வதற்கான ஒரு மைல்கல்லாக இருப்பதுடன் அபிவிருத்தியில் இடரீதியான பிரச்சினைகளை அடையாளம் கண்டு சமமின்மையைக் களைந்து சிறந்த நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை வழங்கும் என தெளிவாகக் கூறக்கூடியதாகவும் எதிர்பார்க்கக் கூடியதாகவும் இருக்கும்.

## I. அறிமுகம்

அபிவிருத்தி என்பது அனைத்து நாடுகளிலும் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். அபிவிருத்தியின் காரணமாகவே உலகின் பல பகுதிகள் வளமானவையாகவும் பல பகுதிகள் வளமின்றியும் காணப்படுகின்றன. கால ஓட்டத்திற்கு ஏற்றாற்போல் இச்செயற்பாடும் மாற்றமடைந்தே செல்கின்றது. அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டே உலக நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாடுகளிலும் ஏதோவொரு காரணியின் நிமித்தம் பிராந்தியங்களிடையே இடரீதியான வேறுபாடுகள் நிலவுகின்றன. உலகில் அபிவிருத்திச் செயற்பாடுகள் நாடுகளுக்கு நாடு பிரதேசங்களுக்கு பிரதேசம் வேறுபட்டே காணப்படுகின்றது. இத்தகைய வேறுபாடுகளாலேயே ஒவ்வொரு நாடுகளும் இடம்சார் ரீதியில் ஏற்றத்தாழ்வுகளால் முன்னணியிலும் பின்தங்கிய நிலையிலும் காணப்படுகின்றனஜ1ஸ. அதாவது உலகின் ஒவ்வொரு பகுதிகளும் சமதன்மை கொண்டதாகக் காணப்படாமையும் இதற்குக் காரணமாக உள்ளது. தரையமைப்பு, காலநிலை, மற்றும் வளங்களின் பரம்பல் போன்றவை வேறுபட்டே அமைகின்றன [2]. இத்தகைய வளங்களின் வேறுபட்ட நிலையும் மனித செல்வாக்குகளும் அபிவிருத்தியில் ஏற்றத்தாழ்வுகள் நிலவுவதற்குக் காரணமாக உள்ளது. மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினையாக பிராந்தியங்களிடையே காணப்படும் இடரீதியான சமமின்மை காணப்படுகின்றது. இது பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் ஒருங்கிணைக்கவும் முடியாததொரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது [3]. அத்துடன் ஒவ்வொரு பிரத்தியேகமான துறைகளுக்கும் பொருத்தமான முறையில் சரியான தீர்மானமெடுத்தலுடன் திட்டமிட்டு தந்திரோபாயங்களை முன்வைத்து வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் தடையாக இடரீதியான பிராந்திய சமமின்மை காணப்படுகின்றது[4]. இலங்கையின் மாகாணங்களுக்கிடையே, மாவட்டங்களுக்கிடையே இடரீதியான சமமின்மை காணப்படுகின்றது. இத்தகைய ஏற்றத்தாழ்வுகளினாலேயே பல்வேறுப்பட்ட பிரச்சினைகள் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்றது. இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் மத ரீதியாக, இன ரீதியாக முரண்பட்ட நிலையையே தோற்றுவிக்கின்றது.

வளங்கள் மற்றும் மக்கள் அவற்றினைப் பயன்படுத்துமளவு என்பவற்றுக்கு ஏற்ப அல்லாமல் தவறான ஒதுக்கீடு காரணமாகவே பிராந்தியங்களுக்கிடையே வேறுபாடு, சமமின்மை நிகழ்வதற்குரிய பிரதான காரணமாகக் காணப்படுகின்றது [5]. நடைமுறை உலகில் சமூகங்களுக்கிடையே பிரச்சினையைத் தோற்றுவிக்கும் விடயமாக அபிவிருத்தியில் இடரீதியான சமமின்மை காணப்படுவதனால் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் வளர்ந்துவரும் பிரதேசமாக யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் ஆகிய பிரதேசங்கள் காணப்படுவதனால் இப் பிரதேசங்களுக்கிடையே நிலவப் பெறுகின்ற இடரீதியான ஏற்றத்தாழ்வுகளை அடையாளப்படுத்துவதன் ஊடாக உயர்மட்டப் பிரதேசங்களுக்கும் தாழ்மட்டப் பிரதேசங்களுக் குமிடையே காணப்படும் இடைவெளியைக் குறைத்துக் கொள்ள வாய்ப்பாக இவ் ஆய்வு உள்ளது. அத்துடன் பல்வேறுப்பட்ட தொழினுட்பத் தகவல்களையும் பகுப்பாய்வு முறைகளையும் உள்ளடக்கியுள்ளதுடன் இது பௌதிக, சமூக அம்சங்களின் பகுப்பாய்விற்கும் உதவியாக இருக்கின்றது. யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் இடரீதியான வேறுபாடுகள் அபிவிருத்தியில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளமையானது இவ் ஆய்வின் ஊடாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. இதனூடாக எதிர்கால அபிவிருத்தியை சிறந்த முறையில முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும்.

சமூக, பொருளாதார மற்றும் குடியியல் குறிகாட்டிகளின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தின் எந்தெந்த பகுதிகள் உயர் அபிவிருத்தி மட்டத்தில் உள்ளன, இடைமட்ட அபிவிருத்தியில் உள்ளன, தாழ்மட்ட அபிவிருத்தியில் உள்ளன என்பவற்றினை இனங்காணக் கூடியவாறு அமையப் பெற்றுள்ளது. இடரீதியான முழுமையான அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதன் ஊடாக அத்தகைய பிரதேசங்களை கவனத்திற்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட ஆய்வுப் பிரதேசத்தில் நிலவுகின்ற சமமின்மையினைக் குறைத்துக் கொள்ள உதவுவதாக இவ் ஆய்வு அமையப் பெற்றள்ளதுடன் அபிவிருத்தியில் இடம்சார் வேறுபாடுகளை இனங்காண்பதற்கான கட்டளைக் கற்களை அடையாளம் செய்தல், சமூக - பொருளாதார மற்றும் குடிப்புள்ளியியல் சுட்டிகளின் அடிப்படையில் இடம்சார்ந்த அபிவிருத்தி வேறுபாடுகளை அடையாளம் செய்தல் மற்றும் முழுமையான அபிவிருத்தியில் பிராந்திய வேறுபாட்டினை மதிப்பிடுதல் போன்ற நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டது.

## II. முறையியல்

ஆய்வுப் பிரதேசமானது யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளையும் 68 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. இவ் ஆய்வானது விபரண மற்றும் காரண காரிய ஆய்வு வகையைச் சார்ந்ததாக இருக்கின்றது. அந்த வகையில் அபிவிருத்தியில் இடரீதியான வேறுபாட்டினை மதிப்பிடுதல் என்ற இவ் ஆய்விற்காக குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளில் காணப்படுகின்ற வேறுபாடுகளையும் இத்தகைய வேறுபாடுகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவான காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு கட்டளைக் கற்கள் தொடர்பிலான சனத்தொகை, சனத்தொகை அடர்த்தி, பால்வேறுபாடு, தொழில் வகை, வீட்டு வசதிகள், பாடசாலைகளின் பரம்பல், சுகாதார வசதிகள், வறுமை, மின்சார வசதிகள், வீதிகள், வைத்தியசாலைகளின் பரம்பல், மத வழிபாட்டுத் தலங்களின் பரம்பல், கழகங்கள், வருமான மட்டம், கல்வியறிவு, தொலைத்தொடர்பு சேவைகள் போன்ற தரவுகள் வெவ்வேறுபட்ட நுட்ப முறைகள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கான தரவுகள் முதல் நிலைத் தரவு மூலங்களிலிருந்தும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. பிரதான முதன்நிலைத் தரவுகள் பட்டியலிடப்படாத நியமமாக்கப்பட்ட நேர்முக உரையாடல் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டன.

கிராம அலுவலர்களிடமிருந்து சமூக - பொருளாதாரக் காரணிகள் அவற்றுடன் தொடர்புடைய தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இத்தகைய உரையாடல்கள் மிகவும் துல்லியமாகவும் தெளிவாக வரையறை செய்யப்பட்ட வினாக்கள் பயன்படுத்தப்படாமல் பரஸ்பர உரையாடல்களாகவும் மேற்கொள்ளப்பட்டன. பூகோள நிலைய ஒழுங்கு (GPS) மூலமான தரவு சேகரிப்பின் நிமித்தம் அமைவிடம் சார்ந்த புவியியல் ஆள்கூறுகள் பூகோள நிலைய ஒழுங்கின் உதவியுடன் பெறப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலைத் தரவுகள் வெளியிடப்படாத உள்ளக அறிக்கைகளையும், வெளியிடப்பட்ட வெளியக அறிக்கைகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசமானது யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய 68 கிராம அலுவலர்

பிரிவுகளையும் கொண்டுள்ளது. இதனால் சமூக - பொருளாதார மற்றும் குடிப்புள்ளியியல் சார்ந்த தரவுகள் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இவற்றினை விட யாழ்ப்பாண மாவட்ட செயலகம், யாழ்ப்பாண மாநகரசபை, நல்லூர் மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகங்களிலிருந்து வருடாந்தம் வெளியிடப்படும் புள்ளிவிபரத் தரவுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆய்வுப் பிரதேசத்தின் இடரீதியான ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிவதற்காக கூட்டுச் சுட்டெண் (ஊழஅிழளைவைந ஐனெநஒ) பகுப்பாய்வு முறைஉபயோகிக்கப்பட்டுள்ளது. இதற்கென பின்வரும் சமன்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

CI=(observed value)/(mean of the respective column)

இங்கு முறையே CI என்பது கூட்டுச் சுட்டெண் ஆகவும் ழடிளநசஎநன ஏயடரந என்பது ஒவ்வொரு குறிகாட்டிகளுக்குமாக எடுக்கப்பட்ட தரவுகளையும் Mean of The Respective column என்பது ஒவ்வொரு குறிகாட்டிகளுக்குமான சராசரியையும் குறித்து நிற்கின்றது. இவ்வாறு பெறப்பட்ட சராசரியினால் குறிக்கப்பட்ட தரவுகள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளுக்குமான ஒவ்வொரு குறிகாட்டிகளுக்கும் கூட்டுச் சுட்டெண் கணிக்கப்பட்டதுடன் அவற்றின் வீச்சுப் பெறுமானத்திற்கேற்ப அபிவிருத்தி மட்டங்கள் (உயர்மட்ட, இடைமட்ட மற்றும் தாழ்மட்டம்) மூன்று வகுப்புக்களாக்கப்பட்டது. இதனூடாக 68 கிராம அலுவலர் பிரிவுகளும் சமூக, பொருளாதார, குடியியல் மற்றும் முழுமையான அபிவிருத்தியில் எவ்வெவ் மட்டங்களில் உள்ளன என்பதை இனங்காணக்கூடியவாறு உள்ளது. இவ்வாறாக வகைப்படுத்தப்பட்ட தரவுகளை உள்ளீடு செய்து புவியியல் தகவல் முறைமை (GIS) ஊடாக ஒவ்வொரு குறிகாட்டிகளும் படங்களாக்கப்பட்டுள்ளன.

### III. பெறுபேறுகள்

பகுப்பாய்வு நுட்பமுறைகளுக்கூடாகப் பெறப்பட்ட பெறுபேற்றிற்கு அமைவாக ஆய்வுப் பிரதேசத்தில் உள்ளடங்கும் 68 கிராம அலுவலர் பிரிவுகளும் சமூக, பொருளாதார, குடியியல் மற்றும் முழுமையான அபிவிருத்தியில் எவ்வெவ் நிலைகளில் உள்ளன என்பதை அடையாளப்படுத்த முடிந்துள்ளதுடன் குறித்த பிரதேசங்களில் ஏற்றத்தாழ்வுகளுக்கான காரணங்களும் கண்டறியப்பட்டுள்ளது.

#### 1. சமூக அபிவிருத்தியில் இடம்சார் வேறுபாடுகள்

கூட்டுச் சுட்டெண் பகுப்பாய்வின் ஊடாக சமூக அபிவிருத்தியில் உயர், இடைமட்ட மற்றும் தாழ்மட்ட அபிவிருத்திப் பிரதேசங்கள் என மூன்று வகையாகப் பாகுபடுத்தி அதனூடாக இடரீதியான வேறுபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது. இதனை அட்டவணை 01 விபரிக்கின்றது. யாழ்ப்பாண நகர் கிழக்கு, நீராவியடி, திருநெல்வேலி மேற்கு, அரியாலை மத்திய மேற்கு பிரதேசங்கள் சமூக அபிவிருத்தியில் உயர் மட்டத்தில் காணப்படுவதுடன் கோண்டாவில் கிழக்கு, வண்ணார்ப்பண்ணை வடக்கு, கோட்டை உள்ளிட்ட 17 பிரதேசங்கள் இடைமட்ட அபிவிருத்தியிலும் அரியாலை கிழக்கு, நாவாந்துறை வடக்கு உள்ளிட்ட 47 பிரதேசங்கள் அபிவிருத்தியில் தாழ்மட்ட நிலையிலும் காணப்படுகின்றன. பாடசாலைகளின் பரம்பல் (தேசிய, மாகாண, தனியார்) , சுகாதார நிலையங்களின் பரம்பல் தன்மை, சமூக ஒருங்கிணைப்பு சார்ந்த நிலையங்களின் பரம்பல் போன்றவை பின்தங்கிய பிரதேசங்களில் குறைவான நிலையிலேயே காணப்படுகின்றன. கிராம சேவகர் பிரிவுகளின் சனத்தொகைக்கும் அப்பகுதிகளில் இடவமைவு பெற்றுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கைக்குமிடையில் தொடர்புகளில்லை. உதாரணமாக 446 குடும்பங்களை உள்ளடக்கிய திருநெல்வேலி வடகிழக்கில் 4 பாடசாலைகள் காணப்படும் அதேவேளை 615 குடும்பங்கள் வசிக்கும் அரியாலை தென்கிழக்கில் பாடசாலைகள் ஒன்றும் இடவமைவு பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய நிலமைகள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் வேறு பகுதிகளை நாடிச் செல்ல வேண்டிய நிலையினைத் தோற்றுவிக்கின்றது. மின்சார வசதிகள் குறைவிருத்தி பிரதேசங்களில் பூரணப்படுத்த வேண்டிய நிலமை காணப்படுகின்றது. குறிப்பாக 81மூ மானவர்களுக்கே மின்சார வசதி பூரணமாகக் கிடைக்கப்பெறுகின்றது.அத்துடன் சில கிராம அலுவலர் பிரிவில் காணப்படும் சமூகக் கட்டமைப்புக்களின் பரம்பல் ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில்குறைவாக உள்ளமை ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணமாகும்.இத்தகைய காரணிகள் பிரதேசங்களுக்கு பிரதேசம் வேறுபடுவதன் காரணமாகவே அபிவிருத்திப் போக்குகளும் வேறுபட்டுச் செல்கின்றன.

**2. பொருளாதார அபிவிருத்தியில் இடம்சார் வேறுபாடுகள்**

ஒரு பிரதேச அபிவிருத்தியின் போக்கு அப்பிரதேசத்தில் நிலவப் பெறும் பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் ஆய்வுப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் வறுமை, பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் பரம்பல், வர்த்தக மையங்களின் பரம்பல், பதிவு செய்யப்பட்ட மற்றும் நிதியியல் சார்ந்த மையங்களின் பரம்பல், வருமான மட்டம் மற்றும் கிராமிய அபிவிருத்தி சங்கங்களின் பரம்பல் போன்ற கட்டளைக் கற்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்கான கூட்டுச் சுட்டெண் பகுப்பாய்வின் ஊடாக அபிவிருத்தியில் உயர், இடைமட்ட மற்றும் தாழ்மட்ட அபிவிருத்திப் பிரதேசங்கள் என மூன்று வகையாகப் பாகுபடுத்தி அதனூடாக பொருளாதார அபிவிருத்தியில் ஒவ்வொரு பிரதேசங்களினதும் இடரீதியான வேறுபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது. இதனை அட்டவணை 02 விபரிக்கின்றது. கட்டளைக் கற்களின் பரம்பல் தன்மை மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பொருளாதார அபிவிருத்தியில் பாசையூர் கிழக்கு, றெக்ளமே'ன் மேற்கு, கொழும்புத்துறை உள்ளிட்ட 46 பிரதேசங்கள் தாழ்மட்ட நிலையிலும் கோண்டாவில், அத்தியடி, அரியாலை உள்ளிட்ட 05 பிரதேசங்கள் அபிவிருத்தியில் உயர்மட்டத்திலும் காணப்படுகின்றன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய அபிவிருத்தி மையங்கள், வர்த்தக மையங்களின் பரம்பற் போக்கில்காணப்படும் வேறுபாடுகள் ஏற்றத்தாழ்வினைத் தோற்றுவித்துள்ளது. முக்கியமாக தெற்கு, தென்மேற்குப் பிரதேசங்களில் 40மூ ற்கும் மேற்பட்டோர் வறுமையானவர்களாகக் காணப்படுவதுடன் இங்குள்ள பாடசாலைகளின் மாணவர் செயல்திறனும் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. அதேநேரம் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதியில் 20 - 30மூ ற்கு இடைப்பட்டோர் வறுமையானவர்களாகக் காணப்படுகின்றனர்.இவ் வறுமையின் இடம்சார் வேறுபாடு அபிவிருத்தியில் சமமின்மையைத் தோற்றுவித்துள்ளது. இவ்வாறு வறுமையில் வாழும் மக்கள் கல்வி செயற்பாடுகளிலோ அல்லது வினைத்திறன் மிக்க பொருளாதார உத்திகளையோ கடைப்பிடிக்க மாட்டார்கள். ஆகவே பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது அவசியமாகும். அத்துடன் உயர் வருமானத்தையுடைய குடும்பங்கள் குறைவாகவும் மிகக் குறைந்த வருமானத்தையுடைய குடும்பங்கள் அதிகமாகவும் காணப்படுகின்றன. தொழில் வாய்ப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் அதற்கான ஊதியம் குறைவாகவே இங்குள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**3. குடியியல் அபிவிருத்தியில் இடம்சார் வேறுபாடுகள்**

குடியியல் அபிவிருத்தியில் ஒவ்வொரு பிரதேசங்களினதும் இடரீதியான வேறுபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது. இதனை அட்டவணை 03 விபரிக்கின்றது. இவ் அபிவிருத்தியில் மொத்த சனத்தொகை, சனத்தொகை அடர்த்தி, மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை, ஆண், பெண் வீதம், உயர்தரம் மற்றும் அதற்கும் மேலான கல்வியைப் பெற்றுக் கொண்டவர்களின் வீதம் போன்றவை கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாண நகர், திருநெல்வேலி மேற்கு, சங்கிலியன்தோப்பு உள்ளிட்ட 5 பிரதேசங்கள் குடியியல் அபிவிருத்தியில் உயர் மட்டத்திலும் நீராவியடி, வண்ணார்ப்பண்ணை வடக்கு, கொக்குவில் வடகிழக்கு உள்ளிட்ட 30 பிரதேசங்கள் அபிவிருத்தியில் இடைமட்டத்திலும் அரியாலை மத்திய தென்பகுதி, சிறாம்பியடி,ஈச்சமோட்டை உள்ளிட்ட 32 பிரதேசங்கள் அபிவிருத்தியில் தாழ்மட்டத்திலும் காணப்படுகின்றன.குடியியல் குறிகாட்டிகளில் முக்கியமாக கல்வியறிவு மட்டம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 17.57 வீதமானவர்களே உயர்தரம் சார்ந்த கல்வியினைப் பூர்த்தி செய்தவர்களாகக் காணப்படுகின்றனர்.கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு எல்லைப் பகுதிகளில் 10மூ குறைவானவர்களே அரச ஊழியர்களாகக் காணப்படுகின்றனர். சனத்தொகை அடர்த்தி சில பகுதிகளில் ஹெக்டேயருக்கு 50 பேருக்குக் குறைவாகக் காணப்படுவதுடன் சில பகுதிகளில் ஹெக்டேயருக்கு 200 பேர் வரையாகக் காணப்படுகின்றது. அத்துடன் தென்கிழக்குப் பகுதியில் சனத்தொகை அடர்த்தி ஹெக்டேயருக்கு ஐந்து பேருக்கும் குறைவாகவே காணப்படுகின்றது. சனத்தொகை அடர்த்தியிலுள்ள வேறுபாடுகளும் இவ் ஆய்வுப் பிரதேசங்களுக்கிடையே சமமின்மையைத் தோற்றுவித்துள்ளது.ஆகவே கல்வித்திட்டங்கள்,சனத்தொகை அடர்த்திக்கேற்ற விதமான அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புப் பொறிமுறைகளை வினைத்திறன் மிக்கதாக மாற்றிக் கொள்வதனூடாக ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

**4. முழுமையான அபிவிருத்தியில் இடம்சார் வேறுபாடுகள்**

சமூக, பொருளாதார மற்றும் குடியியல் சார் அபிவிருத்தியின் தொகுப்பாக இது அமையப்பெற்றுள்ளது. முழுமையான அபிவிருத்தியில் கூட்டு சுட்டெண் பகுப்பாய்வு முறைக்கேற்ப உயர், இடைமட்ட மற்றும் தாழ்மட்ட அபிவிருத்திப் பிரதேசங்கள் என மூன்று வகையாகப் பாகுபடுத்தி அதனூடாக முழுமையான அபிவிருத்தியில்ஒவ்வொரு பிரதேசங்களினதும் இடரீதியான வேறுபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது. இதனை அட்டவணை 04 மற்றும் உரு 01 இன் ஊடாக விளங்கிக் கொள்ளலாம். யாழ்ப்பாண நகரம் கிழக்குப் பகுதி, திருநெல்வேலி மேற்கு, நல்லூர் ராஜதானி, அத்தியடி உள்ளிட்ட 08 பிரதேசங்கள் உயர் அபிவிருத்தியிலும் நெடுங்குளம், அரியாலை கிழக்கு, அரியாலை தென்கிழக்கு, நாவாந்துறை வடக்கு உள்ளிட்ட 46 பிரதேசங்கள் முழுமையான அபிவிருத்தியில் தாழ்மட்டத்திலும காணப்படுகின்றன. இவ்வாறாகசமூக, பொருளாதார மற்றும் குடியியற் குறிகாட்டிகளில் உள்ளடங்கும் கட்டளைக் கற்கள் தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் முழுமையான அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரதேசங்களுக்கிடையே சமமின்மை நிலைபெற்றால் அதனைக் கருத்திற் கொள்ளாமல் திட்டங்களை வகுக்க முடியாது. இத்தகைய வேறுபாடுகளுக்கேற்ப அபிவிருத்தி நிலமைகளின் போது தாழ்மட்ட பிரதேசங்களை கவனத்திற்கொள்வதன் ஊடாக பிரதேசங்களுக்கிடையே தோன்றியுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துக்கொள்ள முடியும்.

அட்டவணை 01

சமூக அபிவிருத்தி மட்டங்கள்

| அபிவிருத்தி மட்டங்கள் | கூட்டு சுட்டெண் பெறுமதி | கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| உயர் மட்டம் | 34.64 - 50.90 | 04 |
| இடை மட்டம் | 18.36 - 34.63 | 17 |
| தாழ் மட்டம் | 2.08 - 18.35 | 47 |

அட்டவணை 02

பொருளாதார அபிவிருத்தி மட்டங்கள்

| | | |
|---|---|---|
| உயர் மட்டம் | 11.59 - 15.98 | 05 |
| இடை மட்டம் | 7.20 - 11.58 | 17 |
| தாழ் மட்டம் | 2.80 - 7.19 | 46 |

அட்டவணை 03


குடியியல் அபிவிருத்தி மட்டங்கள்

| | | |
|---|---|---|
| உயர் மட்டம் | 8.37 - 10.85 | 05 |
| இடை மட்டம் | 5.88 - 8.36 | 30 |
| தாழ் மட்டம் | 3.39 - 5.87 | 32 |

அட்டவணை 04

முழுமையான அபிவிருத்தி மட்டங்கள்

| | | |
|---|---|---|
| உயர் மட்டம் | 51.54 - 71.34 | 08 |
| இடை மட்டம் | 31.75 - 51.53 | 14 |
| தாழ் மட்டம் | 11.95 - 31.75 | 46 |




**உரு: 01**

**IV. முடிவுரை**

நல்லூர் மற்றும் யாழ்ப்பாண பிரதேச அபிவிருத்தியில் இடரீதியான வேறுபாடுகளை மதிப்பிடுதலைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.பின்தங்கிய பிரதேசங்களை அடையாளப்படுத்தி முன்னேற்றகரமான நிலையை ஏற்படுத்துதல், சமூக - பொருளாதார மற்றும் குடியியல் குறிகாட்டிகளினூடாக அபிவிருத்தியில் இடரீதியான வேறுபாடுகள் நிலவுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றினை நிவர்த்தி செய்தல் போன்ற விடயங்கள் கவனத்திற்கொள்ளப்பட்டதன் மூலம் இவ் ஆய்வானது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் போதுகாணப்படும் இடரீதியான ஏற்றத்தாழ்வு சார் பிரச்சினைகளுக்கான தீர்வினை முன்வைப்பதற்கு முயற்சிக்கின்றது. குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள குறைவிருத்திப் பகுதிகளில் வடிகாலமைப்பு, மின்சாரம், போக்குவரத்து, தொடர்பாடல், கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுத்தல், பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஏற்ற விதத்தில் வளங்களை அடையாளப்படுத்துதல் மற்றும் புதிய தொழினுட்ப முறைகளை

அறிமுகப்படுத்துதல், பல கிராம அலுவலர் பிரிவுகளிலும் இயங்காமல் காணப்படும் நீர்ப்பாசனக் குளங்கள், கிராமிய அபிவிருத்தி மற்றும் மீன்பிடி சங்கங்கள் போன்றவற்றை மீளவும் இயங்க வைத்தல் போன்றவற்றின் ஊடாக பிரதேசங்களுக்கிடையே தோன்றியுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துக் கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.மேலும் அபிவிருத்தியில் இடரீதியான வேறுபாடுகள் என்பது தனித்து சமூக, பொருளாதார மற்றும் குடியியல் காரணிகளில் மட்டும் தங்கியுள்ளதல்ல. மாறாக அரசியல், சுற்றாடல், வரலாற்று மற்றும் பௌதிகக் காரணிகள் போன்றவற்றிலும் தங்கியுள்ளது. இத்தகைய விடயங்களையும் கவனத்திற் கொண்டு வரையறை செய்யும் போது இலங்கையின் அபிவிருத்தியில் இடரீதியான ஏற்றத்தாழ்வுகள், சமமற்ற தன்மை சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்க்கமான முடிவுகளை முன்னெடுப்பதற்கு வடிகாலாக இவ் ஆய்வு அமையும் எனலாம்.

## References

1. Huang,Y. and Leung,L. "Measuring Regional Inequality: A Comparison Of Coefficient Of Variation And Hoover Concentration Index", The Open Geography Journal, vol 2,pp 25-34, 2009.
2. Hangaragi ,S. "The Dimensions of Inter- Taluka Disparities in the levels of Development of Old Bijapur District of Karnataka state", Indian Journal Of Regional Science.,Vol. XXXX, no 1, pp 41- 53, 2008.
3. Nayak,l. and Narayankar,D, "Identification Of Regional Disparities in Levels of Development in Bellary District - Karnataka", Indian Journal Of Regional Science.,Vol. XXXXI, No 1, pp 37-47, 2009.
4. Singh, A.K. "Comparative economic development of eastern and western regions of uttar pradesh since 1950 - 1951" , Ph.D.Dissertation, Lucknow University, Lucknow., 1974.
5. Bishnoi.k,N. and Aneja,R. " Rigional Variations of Socio – Economic Development in Haryana ; A District level Analysis", Indian Journal Of Regional Science., Vol. XXXX, pp 26 – 40, 2008.